தமிழக முதன்மை கணக்காய்வுத் தலைவராக சி. நெடுஞ்செழியன் பொறுப்பேற்பு

சி. நெடுஞ்செழியன்

சென்னை, டிச.1: தமிழ்நாட்டின் முதன்மை கணக்காய்வுத் தலைவராக சி. நெடுஞ்செழியன் வியாழக்கிழமை (டிச.1) பொறுப்பேற்றார்.

மத்திய அமைச்சகம் மற்றும் மாநிலத் துறைகளில் மீதான தணிக்கையில் மிகுந்த அனுபவம் உடைய இவர், 1996-ஆம் ஆண்டு ஐ.ஏ.ஏ.எஸ் அதிகாரியாக பணியை தொடர்ந்தார்.

ஐக்கிய நாட்டு சபையின் எய்டஸ் மற்றும் புற்றுநோய் ஆராய்ச்சிக்கான நிறுவனத்திலும் நியூயார்க்கில் உள்ள ஐ.நா. தலைமையகத்திலும் தணிக்கை மேற்கொண்டுள்ளார். மேலும் ஓமன் நாட்டின் உச்ச தணிக்கை அமைப்பின் தணிக்கை நிபுணராகவும் பணியாற்றியுள்ளார்.

தற்போது தமிழகத்தின் 37 துறைகளில், 21 துறைகளை தணிக்கை செய்யும் மாநில தலைமை கணக்கு தணிக்கையாளர் (சிஏஜி) அமைப்புக்கு அவர் தலைமை வகிக்கிறார்.

இந்த அமைப்பு மாநில அரசின், நிதி, வருவாய், சுகாதாரம், கல்வி, உள்ளாட்சி அமைப்புகள் மற்றும் பொதுத் துறை நிறுவனம் ஆகியவற்றைத் தணிக்கை செய்யும் பொறுப்பை மேற்கொள்கிறது.

மேலும் பல தணிக்கை அறிக்கைகளை மாநில சட்டமன்றத்தில் ஒவ்வொரு ஆண்டும் தாக்கல் செய்கிறது.

முதன்மை கணக்காய்வுத் தலைவராக பொறுப்பேற்றவுடன் அலுவலக தணிக்கைகளை மதிப்பாய்வு செய்து, கடமைகளை நிறைவேற்ற முழு முயற்சிகளை மேற்கொள்ளுமாறு தணிக்கை அதிகாரிகளுக்கு அவர் உத்தரவிட்டார்.

ரூ. 1 கோடிக்கு மேல் ஊதியம்: சென்னை ஐஐடி மாணவர்கள் 25 பேர் தேர்வு

சென்னை, டிச. 1: சென்னை ஐஐடி.யில் நிகழ் கல்வியாண்டுக்கான முதல் கட்ட வேலைவாய்ப்பு முகாம் வியாழக்கிழமை முதல் தொடங்கியுள்ள நிலையில், முதல் நாளில் மட்டும் ஆண்டுக்கு ரூ. 1 கோடிக்கு மேல் ஊதியத்தில் 25 மாணவர்கள் பணி வாய்ப்பு பெற்றுள்ளனர்.

இதுகுறித்து சென்னை ஐஐடி சார்பில் வியாழக்கிழமை வெளியிடப்பட்ட செய்திக் குறிப்பு:

நிகழ் கல்வியாண்டுக்கான (2022-2023) முதல்கட்ட வேலைவாய்ப்பு முகாம் வியாழக்கிழமை தொடங்கியது. முகாமில் பங்கேற்க 1,722 மாணவர்கள் பதிவு செய்திருந்தனர்.

இந்த முகாமில் 331 முன்னணி நிறுவனங்கள் பங்கேற்று ஆள்களை தேர்வு செய்தன. முதல் நாள் முடிவில் 445 மாணவ, மாணவிகள் வேலை வாய்ப்பு பெற்றனர்.

குறிப்பாக, 25 மாணவ, மாணவிகளுக்கு ஆண்டுக்கு ரூ.1 கோடிக்கு மேல் ஊதியத்தில் பணியாற்றும் வாய்ப்பு கிடைத்துள்ளது. 15 மாணவர்களுக்கு வெளிநாட்டு வேலைவாய்ப்பு கிடைத்துள்ளது.

இந்த முகாம் டிச.7-ஆம் தேதி வரை தொடர்ந்து நடைபெறவுள்ளது. கடந்த ஆண்டின் முதல்கட்ட வேலைவாய்ப்பின் முதல் நாளில் 407 பேர் வேலைவாய்ப்பு பெற்றிருந்த நிலையில், அது நிகழாண்டு 445-ஆக அதிகரித்துள்ளது.

டெக்ஸாஸ் இன்ஸ்ட்ருமென்ட்ஸ், பஜாஜ் ஆட்டோ லிமிடெட், ஜே.பி.மோர்கன் சேஸ், புரொக்டார் அண்ட் கேம்பல், கிராவிஷன், மெக்கின்ஷே உள்ளிட்ட நிறுவனங்கள் அதிகளவிலான வேலை வாய்ப்புகளை வழங்கியுள்ளன.

பணி வாய்ப்பு பெற்ற மாணவ, மாணவிகளுக்கு சென்னை ஐஐடி இயக்குநர் வி.காமகோடி வாழ்த்துத் தெரிவித்துள்ளார் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

எய்ட்ஸ் விழிப்புணர்வில் தமிழகம் முதலிடம்

அமைச்சர் மா.சுப்பிரமணியன்

எச்.ஐ.வி குறித்த விழிப்புணர்வு பதாகைகள், விழிப்புணர்வு அஞ்சல் அட்டையை வெளியிட்ட மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன். உடன் துறையின் முதன்மைச் செயலாளர் ப.செந்தில்குமார், மாநில எய்ட்ஸ் கட்டுப்பாடு சங்க திட்ட இயக்குநர் த.ந.ஹரிஹரன், பொது சுகாதாரம் மற்றும் நோய் தடுப்பு மருந்துத் துறை இயக்குநர் சி.செல்வவிநாயகம், மருத்துவக் கல்வி இயக்குநர்(பொ) சாந்திமலர் உள்ளிட்டோர்.

சென்னை, டிச. 1: தமிழகத்தில் எய்ட்ஸ் நோயால் 1.24 லட்சம் பேர் பாதிக்கப்பட்டுள்ளனர். இருப்பினும் விழிப்புணர்வு ஏற்படுத்தும் மாநிலங்களில் தமிழகம் முதலிடத்தில் உள்ளது என்று மக்கள் நல்வாழ்வு துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் தெரிவித்தார்.

சென்னை எழும்பூரில் உள்ள சுகாதாரத் துறை, நலவாழ்வு மையத்தில் 'உலக எய்ட்ஸ்' தினம் 2022 விழிப்புணர்வு நிகழ்ச்சி வியாழக்கிழமை நடைபெற்றது. இதில், எய்ட்ஸ் விழிப்புணர்வு குறித்த அஞ்சல் தலை, ரத்த தானம் தொடர்பான புதிய செயலி ஆகியவற்றை வெளியிட்ட அமைச்சர் மா.சுப்பிரமணியன், ரத்தத்தை முறைப்படுத்தும் புதிய அலைவரிசை கருவியின் செயல்பாட்டை தொடக்கி வைத்தார்.

இதைத் தொடர்ந்து செய்தியாளர்களிடம் அவர் கூறியதாவது:

உலக அளவில் 4 கோடி பேரும், இந்தியாவில், 24 லட்சம் பேரும் (0.24 சதவீதம்) எய்ட்ஸ் நோயால் பாதிக்கப்பட்டுள்ளனர். தமிழகத்தில் 1.24 லட்சம் (0.18 சதவீதம்) பாதிக்கப்பட்டுள்ளனர். எய்ட்ஸ் பாதித்தவர்களுக்கான அறக்கட்டளையில் வைக்கப்பட்ட ரூ.5 கோடி வைப்புநிதி இப்போது ரூ. 25 கோடியாக உயர்ந்துள்ளது. அதில் வரும் வட்டித் தொகையில் (ரூ.1.04 கோடி) எய்ட்ஸ் நோயால் பாதிக்கப்பட்டவர்களுக்கும், குழந்தைகளுக்கும் கல்வி, ஊட்டச்சத்துக்குத் தேவையான உதவிகள் செய்யப்பட்டு வருகின்றன.

தமிழகத்தில் எய்ட்ஸ் நோயைக் கண்டறிய 2,090 பரிசோதனை மையங்கள் செயல்பட்டு வருகின்றன. மாநிலத்தில் 9 தனியார் மருத்துவ கல்லூரிகளில் கூட்டு மருத்துவ சிகிச்சை மையங்கள் உள்பட மொத்தம் 64 கூட்டு மருத்துவ சிகிச்சை மையங்கள் செயல்படுகின்றன. இதில், 1.24 லட்சம் பேருக்கு சிகிச்சையும், மருந்துகளும் வழங்கப்பட்டு வருகின்றன.

சென்னை ராஜீவ் காந்தி, மதுரை ராஜாஜி மருத்துவமனையில் ரேடியோ அலைவரிசை கருவி அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. இதில், ரத்தம் சேமிக்கும்போது, அவற்றை முறைப்படுத்தி வழங்குதல், காலாவதியான ரத்தத்தைப் பயன்படுத்தும் போது அலாரம் ஒலிக்கும் வகையில் செயல்படும். இவை மற்ற மருத்துவமனைகளுக்கும் விரிவுபடுத்தப்படும்.

63 முறைக்கு மேல் அமைச்சர் ரத்த தானம்: நான் 63 முறைக்கு மேல் ரத்த தானம் செய்துள்ளேன். ரத்த தானம் செய்வதில் மேற்கு வங்கம், தமிழகம் சிறப்பாகச் செயல்படுகிறது. அதேபோல், எய்ட்ஸ் நோய் குறித்த விழிப்புணர்வு ஏற்படுத்துவதிலும், தமிழகம் முதலிடத்தை பிடித்துள்ளது என்றார் அவர்.

கீழ்ப்பாக்கத்தில் குடிநீர் தரத்தைப் பரிசோதிக்கலாம்

சென்னை, டிச. 1: சென்னை குடிநீர் வாரியம் சார்பில் கீழ்ப்பாக்கத்தில் ரூ. 7 கோடி மதிப்பீட்டில் குடிநீர், கழிவுநீரின் தரத்தை நவீன முறையில் பரிசோதிக்க புதிய பரிசோதனைக் கூடம் செயல்பாட்டுக்கு கொண்டுவரப்பட்டுள்ளது.

இதுகுறித்து சென்னை குடிநீர் வாரியம் வியாழக்கிழமை வெளியிட்ட செய்திக் குறிப்பு:

சென்னையில் குடிநீரின் தரத்தை உறுதி செய்யும் வகையில் தினந்தோறும் 600 இடங்களில் குடிநீர் மாதிரிகள் எடுக்கப்பட்டு, ஆய்வு செய்யப்பட்டுவருகிறது. மேலும், பொதுமக்கள் தங்கள் வீடுகள், வணிக பயன்பாடு, அடுக்குமாடி குடியிருப்புகளில் பயன்படுத்தும் குடிநீர், வீடுகளில் உள்ள கிணறுகள், ஆழ்துளை நீரின் தரத்தை பரிசோதிக்க தனிநபர் பயன்பாட்டுக்கு ரூ. 75, அடுக்குமாடி குடியிருப்புகள், வணிக பயன்பாட்டுக்கு ரூ. 200, கிணறுகள், ஆழ்துளை நீர் ஆய்வுக்கு ரூ. 200 கட்டணங்கள் நிர்ணயிக்கப்பட்டுள்ளன.

கீழ்ப்பாக்கத்தில் உள்ள இந்தப் பரிசோதனைக் கூடத்தில், குடிநீரின் தரத்தை நவீன முறையில் பரிசோதிக்கவும், கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையங்களிலிருந்து வெளியேற்றப்படும் கழிவுநீரின் தரத்தைப் பரிசோதிக்கவும் தனித்தனியே பரிசோதனைகள் மேற்கொள்ளப்படும்.

மேலும், குடிநீர், கழிவுநீரில் உள்ள வேதிப் பொருள்கள், நுண்ணுயிரிகள் ஆகியவற்றை பரிசோதிக்க தனித்தனியாக நவீன கருவிகள் அமைக்கப்பட்டுள்ளன. இதன் மூலம், குடிநீர் தொடர்பான 23 பரிசோதனைகளும், கழிவுநீர் தொடர்பான 16 பரிசோதனைகளும் மேற்கொள்ளப்படும்.

எனவே, பொதுமக்கள் தங்கள் வீடுகள், வணிக பயன்பாடு, அடுக்குமாடி குடியிருப்புகளில் பயன்படுத்தும் குடிநீர், வீடுகளில் உள்ள கிணறுகள், ஆழ்துளை நீரின் தரத்தை இந்த நவீன பரிசோதனைக் கூடத்தில் பரிசோதனை செய்து பயன்பெறலாம் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

கீழ்ப்பாக்கத்தில் உள்ள இந்தபுதிய மையத்தை முதல்வர் மு.க.ஸ்டாலின் கடந்த நவ.22-ஆம் தேதி தொடக்கி வைத்தது குறிப்பிடத்தக்கது.

சென்னை மாவட்டத்தில் பள்ளிகள் நாளை செயல்படும்

சென்னை, டிச. 1: சென்னை மாவட்டத்தில் உள்ள அனைத்து வகை உயர்நிலை, மேல்நிலைப் பள்ளிகளும் சனிக்கிழமை (டிச.3) செயல்படும் என மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலர் மார்ஸ் அறிவித்துள்ளார்.

இது குறித்து அவர் வியாழக்கிழமை வெளியிட்டுள்ள செய்தி: தொடர் பெருமழையின் காரணமாக சென்னை மாவட்டத்தில் செயல்பட்டு வரும் அனைத்து வகைப் பள்ளிகளுக்கு விடுமுறை அறிவிக்கப்பட்டது.

அப்பணி நாள்களை ஈடு செய்திடும் வகையில் டிச. 3-ஆம் தேதி சென்னை மாவட்டத்தில் செயல்பட்டு வரும் அனைத்து வகை உயர்நிலை மற்றும் மேல்நிலைப் பள்ளிகளும் திங்கள்கிழமை பாடவேளையினை பின்பற்றி முழு பணி நாளாக கருதி செயல்பட வேண்டும் எனத் தெரிவித்துள்ளார்.

அதேவேளையில் 1 முதல் 5-ஆம் வகுப்பு வரை உள்ள தொடக்கப் பள்ளி மாணவர்களுக்கு வகுப்புகள் நடைபெறாது. 6 முதல் பிளஸ் 2 வகுப்பு மாணவர்களுக்கு மட்டுமே வகுப்புகள் நடைபெறும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

மாநகராட்சியில் முகப்பதிவு மூலம் ஊழியர்களின் வருகைப் பதிவு

சென்னை மாநகராட்சி அலுவலகத்தில் தனது வருகையை முகப்பதிவு முறையில் பதிவு செய்யும் சென்னை மாநகராட்சி ஊழியர்.

சென்னை, டிச. 1: சென்னை மாநகராட்சியில் 315 அலுவலகங்களில் பணியாற்றும் ஊழியர்களின் வருகைப் பதிவை முகப்பதிவு அடிப்படையில் கண்காணிக்கும் முறை அமல்படுத்தப்பட்டுள்ளது.

இந்த மாநகராட்சியில் அலுவலர்கள், பணியாளர்கள் என 14 ஆயிரத்து 897 பேர் பணியாற்றி வருகின்றனர். இதில் தண்டையார்பேட்டை, ராயபுரம், திரு.வி.க.நகர், அண்ணா நகர் ஆகிய மண்டலங்கள், அம்பத்தூர் மண்டலத்தில் ஒரு பகுதி அளவு என 9 ஆயிரத்து 46 பேர் பணியாற்றுகின்றனர்.

திருவொற்றியூர், மணலி, மாதவரம் ஆகிய மண்டலங்களில் 'என் விரோ' என்ற தனியார் நிறுவனமும், தேனாம்பேட்டை, கோடம்பாக்கம், வளசரவாக்கம், ஆலந்தூர், அடையாறு, பெருங்குடி, சோழிங்கநல்லூர் ஆகிய மண்டலங்களில் 'உர்பேசர் சுமீத்' என்ற நிறுவனமும் தூய்மை பணிகளை மேற்கொண்டு வருகின்றன.

தூய்மைப் பணியில் ஈடுபட்டுள்ள பணியாளர்களின் வருகையை முகப்பதிவு அடிப்படையில் பதிவு செய்யும் முறை வியாழக்கிழமை முதல் செயல்பாட்டுக்கு கொண்டுவரப்பட்டது.

இதன்மூலம் பணியாளர்களின் வருகை சரியான நேரத்தில் இருப்பதை உறுதி செய்ய முடியும். தற்போது இந்த வருகைப் பதிவு செய்யும் முகப்பதிவு முறை 315 அலுவலங்களில் பொருத்தப்பட்டு செயல்பாட்டுக்கு வந்துள்ளது.

விரைவில் நகர்ப்புற ஆரம்ப சுகாதார நிலையங்கள், நகர்ப்புற சமுதாய நல மையங்களிலும் பணியாற்றும் பணியாளர்களின் வருகைப் பதிவை மேற்கொள்ள பயோமெட்ரிக் முறையை அமல்படுத்த 184 இயந்திரங்கள் கொள்முதல் செய்யப்பட்டு பொருத்தப்பட உள்ளன.

बैंक ऑफ़ बड़ौदा
பாங்க் ஆஃப் பரோடா

செங்கல்பட்டு கிளை
எண். 29A, G-10, அழுகேசன் சாலை,
வேதாச்சலம் நகர், செங்கல்பட்டு - 603 001
தொலைபேசி : 044-2743 0224 / 2743 0225

சுவாதீன அறிவிப்பு

கீழே கையொப்பமிட்டுள்ள பாங்க் ஆஃப் பரோடா வங்கியின் அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி அவர்களால் 2002ம் ஆண்டு கடனீட்டு சொத்துக்களை ரொக்கமாக்குதல் மற்றும் நிதி சொத்துக்களை சீரமைத்தல் மற்றும் கடனீட்டு சொத்து மீதான உரிமை அமலாக்கச் சட்டத்தின் கீழும் மேற்சொன்ன சட்டத்தின் 13 (12) வது பிரிவின் கீழ் வழங்கப்பட்ட அதிகாரத்தின் கீழும் 2002ம் ஆண்டு கடனீட்டு சொத்துக்கள் மீதான உரிமை அமலாக்க விதி 3க்கு ஏற்பவும், கடன்தாரர் **M/s. VAR AND VEN STORE** உரிமையாளர் **திரு. E. வெங்கடேஷ்,** ஸ்ரீலேகா காம்ப்ளக்ஸ், கடை எண்.1, சட்ராஸ் மெயின் ரோடு, நெய்குப்பி கிராமம், திருக்கழுகுன்றம் தாலுகா, செங்கல்பட்டு - 603102 செலுத்த வேண்டிய தொகை **ரூ.7,12,174.90** (ரூபாய் ஏழு லட்சத்து பனிரெண்டாயிரத்து நூற்று எழுபத்து நான்கு மற்றும் தொண்ணூறு காசுகள் மட்டும்) மேலும் **25-04-2022** முதல் செலுத்தப்படும் நாள் வரையிலான மேலதிக வட்டி அதனுடன் இணைந்து தொகை மற்றும் இதர செலவினங்கள் ஆகியவற்றை சேர்த்து 60 நாட்களுக்குள் செலுத்தக்கோரி **13-05-2022** தேதியிட்ட கோரிக்கை அறிவிப்பில் கேட்டுக்கொள்ளப்பட்டார்கள். சம்பந்தப்பட்ட கடன்தாரர் மேற்சொன்ன தொகையை திரும்பச் செலுத்தத் தவறியதால் கடன்தாரர் மற்றும் பொதுமக்களுக்கு இந்த அறிவிப்பின் மூலம் தெரிவிக்கப்படுவது என்னவென்றால், கீழே குறிப்பிட்டுள்ள சொத்துக்கள் மேற்சொன்ன சட்டத்தின் பிரிவு 13(4)ன் கீழ் கொடுக்கப்பட்டுள்ள அதிகாரத்தின்படியும், விதிமுறைகளின் விதி 8க்கு இணங்கவும், **30.11.2022** அன்று கீழே கையொப்பமிட்டுள்ள அதிகாரி அசையா சொத்தினை சுவாதீனம் எடுத்துள்ளார்.

இந்த அறிவிப்பின் மூலம் குறிப்பாக கடன்தாரர் / ஜாமீன்தாரர்/அடமானதாரர் பொதுவாக பொது மக்களுக்கு எச்சரிக்கப்படுவது என்னவென்றால், சுவாதீனம் எடுத்துக்கொண்ட இந்த சொத்துக்கள் **பாங்க் ஆஃப் பரோடா** வங்கிக்கு **29-11-2022** தேதிப்படி செலுத்த வேண்டிய தொகையான **ரூ.6,97,581.70** (ரூபாய் ஆறு லட்சத்து தொண்ணூற்று ஏழாயிரத்து ஐநூற்று எண்பத்து ஒன்று மற்றும் எழுபது காசுகள் மட்டும்) மேலும் **27-11-2022** முதல் செலுத்தப்படும் நாள் வரையிலான வட்டி, மேலதிக வட்டி இதர கட்டணங்களுக்கு பிணையாக உள்ளது என்பதால் யாரும் கீழே குறிப்பிட்டுள்ள சொத்துக்கள் மீது எந்தவித நடவடிக்கைகளும் மற்றும் தொடர்புகளும் வைத்துக்கொள்ளக் கூடாது என்று இதன்மூலம் அறிவிக்கப்படுகிறது. SARFAESI சட்டத்தின் 13(8) விதிகளின்படி பாதுகாப்பு மற்றும் அதன் விதிகளுக்காகவும் தங்கள் கவனத்திற்காகவும் இந்த அறிவிப்பு வெளியிடப்படுகிறது.

அசையா சொத்து விவரம்

சென்னை மாவட்டம், சோழிங்கநல்லூர் தாலுகா, பழைய மாமல்லபுரம் சாலை, சர்வே எண்.450/3B1ல் உள்ள உள்ள 3433 சதுர அடி நிலம் அதன் துண்டுகளும் பாகங்களும். எல்லைகள் **வடக்கு :** திரு. துலுக்கானம் நாயக்கரின் நிலம், **தெற்கு :** திரு. ஞானசண்முகத்திற்கு உரிய சொத்து, **கிழக்கு :** டாலர் டிஸ்ட்ரிக்ட் பேக்டரியின் மனை, **மேற்கு :** பழைய மாமல்லபுரம் சாலை.

இடம் : செங்கல்பட்டு
தேதி : 30-11-2022

அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி
பாங்க் ஆஃப் பரோடா

இந்தியன் ஓவர்சீஸ் வங்கி
ராயபுரம் கிளை: எண்.62/153 & 63/155, M S கோயில் தெரு, ராயபுரம்,
சென்னை-600 013 Ph: 044-2595 3208 / 2595 2550 Email: iob0673@iob.in

அசையா சொத்துக்களின் விற்பனை அறிவிப்பு

கடனீட்டு சொத்துக்கள் ரொக்கமாக்குதல் மற்றும் நிதிச்சொத்துக்களை மறு சீரமைத்தல் கடனீட்டு சொத்துக்கள் மீதான உரிமை அமலாக்க சட்டம், 2002, பிணையுறுதல் (அமலாக்கம்) விதிகள் 2002-ன் விதி 8(6) / 9(1) உடன் கீழ், அசையா சொத்துக்களின் இ-ஏல விற்பனை அறிவிப்பு

இந்தியன் ஓவர்சீஸ் வங்கி, ராயபுரம் கிளையின் அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி அவர்கள், மேற்படி வங்கிக்கு **கடன்தாரர்: 1.Mr.J.ஸ்ரீதரன்,** S/o.V.B.ஜானகிராமன், **2.Mrs.S.காமாட்சி,** W/o.J.ஸ்ரீதரன், **இருவரது முகவரி:** ப்ளாட் எண்.2, 3வது தளம், ப்ளாக் C, பிருந்தாவன் அபார்ட்மெண்ட்ஸ் (C-302), பழைய எண்.15, புதிய எண்.67, குறுக்கு ரோடு, புதிய வண்ணாரப்பேட்டை, சென்னை-600 081 **ஆகியோரிடமிருந்து** பெறவேண்டிய கடன் தொகையான **31.10.2022** அன்றுள்ளபடி **ரூ.74,90,367.05** (ரூபாய் எழுபத்து நான்கு லட்சத்து தொண்ணூறாயிரத்து முன்னூற்று அறுபத்து ஏழு மற்றும் பைசா ஐந்து மட்டும்)ஐ வசூலிக்கும் பொருட்டு, கடன் வழங்கிய வங்கியிடம் பிணையப் படுத்தப்பட்ட/அடுவைக்கப்பட்ட ஆக்கப்பூர்வ சுவாதீனம் செய்து கொண்ட கீழ்கண்ட அசையாச் சொத்தினை **21.12.2022** அன்று **விற்பனை செய்யவுள்ளார்** என்பதை குறிப்பாக கடன்தாரர்(கள்) மற்றும் ஜாமீன்தாரர்(கள்) மற்றும் பொதுமக்களுக்கு இந்த அறிவிப்பின் மூலம் தெரியப்படுத்துகிறது. இந்த சொத்துக்கள் **"உள்ள இடத்தில் உள்ளவாறு" "உள்ளது உள்ளவாறு" மற்றும் "எந்த நிலையில் உள்ளதோ அந்த நிலையிலேயே"** விற்கப்படும்.

அசையா சொத்தின் விவரம்

வடசென்னை பதிவு மாவட்டம் மற்றும் ராயபுரம் சார் பதிவு மாவட்டம் எல்லைக்கு உட்பட்ட சர்வே எண்.3977/3, ப்ளாக் எண்.76, **ப்ளாட் எண்.2, 3வது தளம், ப்ளாக் C (C-302), பிருந்தாவன் அபார்ட்மெண்ட்ஸ் என பெயரிட்ட காம்ப்ளக்ஸ் பில்டிங், தண்டையார்பேட்டை கிராமம், போர்ட் தண்டையார்பேட்டை தாலுகா, சென்னை-600 081 என்னும் முகவரியில் 1545 சதுர அடி ப்ளாட், பொது இடம் உட்பட,** மொத்தமுள்ள 91044 சதுர அடி (606.59 சதுர மீட்டர்) நிலத்தில் 854.63 சதுர அடி பிரிக்கப்படாத பங்கு நிலம், அதனுடன் இணைந்த துண்டுகளும் பகுதிகளும். எல்லைகள்: வடக்கு: R.S.எண்.3977/7-ல் உள்ள குறுக்கு ரோடு, தெற்கு: R.S.எண்.3973-ல் உள்ள குடியிருப்பு இடம், கிழக்கு: R.S.எண்.3977/13-ல் உள்ள காம்தார் எஸ்டேட் (நிலம் மற்றும் தொழிற்சாலை கட்டிடம் மற்றும் OSR நிலம்), மேற்கு: R.S.எண்.3976/3-ல் உள்ள நிலம் மற்றும் கட்டிடம்.

குறைந்தபட்ச கேட்பு விலை: ₹ 65,66,000/-; டேவணித்தொகை: ₹ 6,56,600/-
ஏல உயர்வுத்தொகை: ₹ 50,000/-

இ-ஏல தேதி மற்றும் நேரம்: 21.12.2022 காலை 11.00 மணி முதல் 3.00 மணி வரை
https://www.mstcecommerce.com/auctionhome/ ibapi
என்ற இணையத்தளத்தில் நடைபெறும். விற்பனை முடியும் வரை தலா 10 நிமிடங்கள் கொண்ட நீட்டிப்புகள் அனுமதிக்கப்படும்

சொத்துக்களை பார்வையிடுதல் : 19.12.2022 அன்று காலை 10.00 மணி-மாலை 5.00 மணிக்குள்

விலைக்குறிப்பீடு படிவத்தினை EMD உடன் ஆன்லைனில் சமர்பிக்கும் தேதி : **02.12.2022** முதல்	விலைக்குறிப்பீடு படிவத்தினை EMD உடன் ஆன்லைனில் சமர்பிக்க கடைசி தேதி: **20.12.2022 - 5.00 p.m.**

தொடர்புகொள்ள வேண்டிய நபர் : Mr. Kanhaiya Kumar, முதன்மை மேலாளர், Mob: 86010 84198

விரிவான ஏல விதிகள் மற்றும் நிபந்தனைகளுக்கு, சேவை வழங்குனர் இணைத்தளமான **https://www.mstcecommerce.com/auctionhome/ibapi** அல்லது வங்கியின் இணையத்தளமான **www.iob.in** பார்க்கவும்.

இடம் : சென்னை
தேதி : 28.11.2022

அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி,
இந்தியன் ஓவர்சீஸ் வங்கி

கடன்தாரர்கள் மற்றும் உத்தரவாதமளித்தவர்கள் ஆகியோர்களுக்கு சம்பந்தப்பட்ட கடனிற்கான மேற்குறித்த தேதியில் நடைபெறும் இ-ஏலம் குறித்த 2002 பிணைய நலன் (அமலாக்கம்) விதிகளின் விதி 8(6) மற்றும் விதி 9(1)ன் கீழான அறிவிப்பும் இதுவேயாகும்.

தெற்கு ரயில்வே

திருவனந்தபுரம் (பணிகள் பிரிவு)
14.11.2022 நாளிட்ட மின் ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு எண்:
V/W/TVC/25/2022 -ன் அயிட்டம் எண் (1) க்கான திருத்த அறிவிப்பு

பணிப் பெயர்: திருப்புணித்துற (Tripunnithara) :- பார்க்கிங் பகுதி மற்றும் எல்லை தடுப்புச் சுவரை (Boundary Wall) மேம்படுத்துதல். ஒப்பந்தப்புள்ளி மூடும் நாள் மற்றும் நேரமானது **19.01.2023 அன்று 11.00 மணி** என்பதற்குப் பதிலாக, **19.12.2022 அன்று 11.00 மணி என படிக்கப்பட வேண்டும்.** மேற்கண்ட ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பில் உள்ளவற்றில் இதர வேறெந்த மாற்றமும் இல்லை; எனவே விவரங்கள் **www.ireps.gov.in** என்ற இணையதள போர்ட்டலில் சரிபார்க்கப்பட வேண்டும்.

முதுநிலைக் கோட்டப் பொறியாளர்/ஒருங்கிணைப்பு, திருவனந்தபுரம்-14

Follow us on : twitter.com/GMSRailway

E-ஏல விற்பனை அறிவிப்பு
IBBI (கலைப்பு நடைமுறைகள்) ஒழுங்குமுறைகள் 2016, 32 & 33-ன் கீழ் கலைப்பு
டெல்ட்ரானிக்ஸ் இந்தியா லிமிடெட் (கலைப்பு நிலையில்) [டெல்ட்ரானிக்ஸ்]

"உள்ள இடத்தில் உள்ளவாறு, உள்ளது உள்ளவாறு, எல்லாத புகார்களும் ஏற்கப்பட மாட்டாது" எனும் அடிப்படையில் கீழே பட்டியலிடப்பட்டுள்ள டெல்ட்ரானிக்ஸ் சொத்துகளின் E-ஏல விற்பனையில் ஏல அட்டவணைப்படி பங்கேற்க தகுதியான ஏலதாரர்களிடமிருந்து விலைப்புள்ளிகளை டெல்ட்ரானிக்ஸ் கலைப்பு அதிகாரி வரவேற்கிறார். ஏல ஆவணத்தில் காணும் விதிமுறை நிபந்தனைகள் மற்றும் நடைமுறைகள் படி ஏலம் நடைபெறும். அவற்றை இணையதளத்திலிருந்து (https://www.bankeauctions.com) பதிவிறக்கம் செய்யலாம்.

தொகுப்பு எண்.	தொகுப்பு பெயர்	அமைவிடம்	நிர்ணய விலை (ரூ. லட்சத்தில்)	EMD (ரூ. லட்சத்தில்)	அதிகரிக்கும் ஏலத் தொகை (ரூ. லட்சத்தில்)
1	தொழிற் சாலை நிலம் & கட்டிடம்	மனை எண்.81, பிளாக் A, பிரிவு 57, கட்டம் III, நொய்டா, மாவட்டம் கௌதம் புத் நகர், உ.பி-201301	925.00	92.50	5.00
2	தொழிற் சாலை நிலம் & கட்டிடம்	மனை எண்.3, பிளாக் E, பிரிவு 59, கட்டம் III, நொய்டா, மாவட்டம் கௌதம் புத் நகர், உ.பி-201301	2695.00	269.50	5.00
3	ஆலை மற்றும் இயந்திரங்கள்	மனை எண்.3, பிளாக் E, பிரிவு 59, கட்டம் III, நொய்டா, மாவட்டம் கௌதம் புத் நகர், உ.பி-201301	13.30	1.33	0.10
4	தொழிற் சாலை நிலம் & கட்டிடம் மற்றும் ஆலை மற்றும் இயந்திரங்கள்	மனை எண்:A14, சிப்காட் தொழில் பூங்கா, இருங்காட்டுக்கோட்டை கிராமம், ஸ்ரீபெரும்புதூர் தாலுகா, காஞ்சிபுரம் மாவட்டம், தமிழ்நாடு	310.00	31.00	2.15
5	தொழிற் சாலை நிலம் & கட்டிடம்	மனை எண்:A14, சிப்காட் தொழில் பூங்கா, இருங்காட்டுக்கோட்டை கிராமம், ஸ்ரீபெரும்புதூர் தாலுகா, காஞ்சிபுரம் மாவட்டம், தமிழ்நாடு	276.00	27.60	2.00
6	ஆலை மற்றும் இயந்திரங்கள்	மனை எண்: A14, சிப்காட் தொழில் பூங்கா, இருங்காட்டுக்கோட்டை கிராமம், ஸ்ரீபெரும்புதூர் தாலுகா, காஞ்சிபுரம் மாவட்டம், தமிழ்நாடு	34.00	3.40	0.15
குறிப்பு: a) தொகுப்பு 4 க்கு ஏலங்கள் பெறப்பட்டால், தொகுப்பு 5 மற்றும் 6க்கு ஏலங்கள் பரிசீலிக்கப்பட மாட்டாது					
7	ஆலை மற்றும் இயந்திரங்கள்	மனை எண்.12 குத்தம்பாக்கம் கிராமம், பூந்தமல்லி தாலுகா, திருவள்ளூர் மாவட்டம், தமிழ்நாடு	915.00	91.50	0.25
8	வாகனங்கள்	மனை எண்.12 குத்தம்பாக்கம் கிராமம், பூந்தமல்லி தாலுகா, திருவள்ளூர் மாவட்டம், தமிழ்நாடு	9.80	0.98	0.10

வெளியீடு தேதி: 02-12-2022 | **தகுதி ஆவணங்களை சமர்ப்பிப்பதற்கான கடைசி தேதி:** 16-12-2022 **தகுதியான ஏலதாரர் அறிவிக்கப்படும் தேதி:** 19-12-2022 | **ஆய்வுக்கான கடைசி தேதி:** 26-12-2022 **EMDக்கான கடைசித் தேதி:** 28-12-2022 | **ஏலத் தேதி:** 30-12-2022 காலை 11 மணி முதல் மதியம் 1 மணி வரை (வரம்பற்ற 5 நிமிட நீட்டிப்புகளுடன்)

ஆர்வமுள்ள விண்ணப்பதாரர்கள் EMD தொகையை **NEFT/RTGS மூலம் பாரத ஸ்டேட் வங்கியில் டெபாசிட் செய்ய வேண்டும், வங்கி கணக்கு எண்: 10642213131 பயனாளியின் பெயர்: Deltronix India Limited-In Liquidation, IFSC குறியீடு: SBIN0070695** அல்லது Deltronix India Limited-In Liquidation எனும் பெயரில் - ஒரு தேசியமயமாக்கப்பட்ட அல்லது ஷெட்யூல்டு வங்கியில் பெறப்பட்ட கேட்பு வரைவோலை (DD) மூலம் செலுத்தலாம்.

ஆர்வமுள்ள விண்ணப்பதாரர்கள் ஏல ஆவணத்தைப் பார்க்கவும் மற்றும் விண்ணப்பம் சமர்ப்பிக்க இறுதி நாள், நேரத்திற்கு முன், பூர்த்தி செய்யப்பட்ட ஏல ஆவணங்களை EMD செலுத்திய தாள் பிரதி சான்றுடன் கலைப்பு அதிகாரியிடம் சமர்ப்பிக்க வேண்டும் மற்றும் மின் ஏல இணையதளத்தில் (https://www.bankeauctions.com) பதிவேற்றவும். விண்ணப்பதாரர்கள் எந்தவொரு உதவிக்கும் கீழ் கையொப்பமிட்டவரைத் தொடர்பு கொள்ளலாம் அல்லது திரு. ஹிமான்ஷு பன்சால் - 7494942118/ திரு.ஜதின் குமார் - 9315765963, மின்னஞ்சல்: cirp.deltronix@gmail.com அல்லது திரு. வினோத் சௌஹான் (Team E-Auction Agency): delhi@c1india.com Ph: +91-9813887931.

சுனிதா உமேஷ்
IBBI பதிவு எண்: IBBI/IPA-001/IP-P00080/2017-2018/10165
தேதி: 02/12/2022 **கலைப்பு அதிகாரி:** டெல்ட்ரானிக்ஸ் இந்தியா லிமிடெட், (கலைப்பு நிலையில்)
இடம்: புது டெல்லி **மின்னஞ்சல்:** cirp.deltronix@gmail.com
அலுவலகம்: M/s. UCC & அசோசியேட்ஸ் LLP,
பட்டய கணக்காளர்கள் 1315, அன்சல் டவர், 38 நேரு பிளேஸ், புது தில்லி-110019

ஞாயிற்றுக்கிழமைதோறும்
தினமணி கதிர்
இளமை! புதுமை! இனிமை!

தெற்கு ரயில்வே

பணிகள் பிரிவு, திருச்சிராப்பள்ளி கோட்டம்,
மின் ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு எண்: TPJ/13 of 2022
தேதி: 28.11.2022

கோட்ட ரயில்வே மேலாளர் / பணிகள் பிரிவு / திருச்சிராப்பள்ளி கோட்டம், திருச்சிராப்பள்ளி - 1 அவர்கள், இந்திய குடியரசுத் தலைவர் சார்பாக, நமது மின் ஒப்பந்தப்புள்ளி போர்ட்டலான **www.ireps.gov.in** -ல் கொடுக்கப்பட்டுள்ள ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு மற்றும் முழுமையான விவரங்களின் படி, பின்வரும் பணிகளுக்கான ஆன்லைன் ஒப்பந்தப்புள்ளிகளை வரவேற்கிறார்.

வ. எண்	ஒப்பந்தப்புள்ளி எண், பணிப் பெயர், சராசரி தொகை மதிப்பு, முன்வைப்புத் தொகைக் கட்டணம், பணி நிறைவேற்றும் காலம்
1	ஒப்பந்தப்புள்ளி எண்: **TPJ-13-2022-01**; திருச்சிராப்பள்ளி சந்திப்பு - இரண்டாவது நுழைவு - SSE / நிரந்தர வழி / திருச்சிராப்பள்ளி பிரிவில், TPJ யார்டில், புதிய நடைமேடை எண்: 8 -க்கு, வழித்தடம் இடுதல் மற்றும் வழித்தடம் இணைத்தல். சராசரி தொகை மதிப்பு (₹ லட்சத்தில்): **47.67;** முன்வைப்புத் தொகைக் கட்டணம்: ₹ **95,400;** பணி நிறைவேற்றும் காலம்: **04 மாதம்**
2	ஒப்பந்தப்புள்ளி எண்: **TPJ-13-2022-02**; நாகூர் நிலையத்தில், நடைமேடை எண்: 1 -ஐ செப்பனிடுதல் மற்றும் நிலைய கட்டிடம், நடைமேடைக் கூரை மற்றும் நடைமேம்பாலத்தை மெருகேற்றுதல் மற்றும் பழுதடைந்த மழைநீர் குழாய்களை மாற்றியமைத்தல். சராசரி தொகை மதிப்பு (₹ லட்சத்தில்): **55.67;** முன்வைப்புத் தொகைக் கட்டணம்: ₹ **1,11,300;** பணி நிறைவேற்றும் காலம்: **06 மாதம்**
3	ஒப்பந்தப்புள்ளி எண்: **TPJ-13-2022-03**; SSE / பணிகள் / மயிலாடுதுறை பிரிவில், சேர்ந்தனூர், திருத்துறைப்பூர் மற்றும் வரகல்பட்டு நிலையங்களில், நடுத்தர அளவிலுள்ளதை, உயர்மட்ட நடைமேடையாக உயர்த்துதல். சராசரி தொகை மதிப்பு (₹ லட்சத்தில்): **248.30;** முன்வைப்புத் தொகைக் கட்டணம்: ₹ **2,74,200;** பணி நிறைவேற்றும் காலம்: **09 மாதம்**
4	ஒப்பந்தப்புள்ளி எண்: **TPJ-13-2022-04**; SSE / நிரந்தர வழி/ அரியலூர் பிரிவில், RDSO's தொழில்நுட்ப வரையறையின்படி, மின் வழித்தடம் சார்ந்த லூப்ரிகேட்டர்கள் - 10 எண்ணிக்கை, வழங்குதல், நிறுவுதல், செயல்படுத்துதல் மற்றும் பராமரித்தல். சராசரி தொகை மதிப்பு (₹ லட்சத்தில்): **48.19;** முன்வைப்புத் தொகைக் கட்டணம்: ₹ **96,400;** பணி நிறைவேற்றும் காலம்: **03 மாதம்**
5	ஒப்பந்தப்புள்ளி எண்: **TPJ-13-2022-05**; மாம்பலப்பட்டு பேலஸ்ட் டிப்போ - VM - KPD பிரிவில், SSE / நிரந்தர வழி / திருவண்ணாமலை பிரிவுக்காக, எந்திரம் நொறுக்கிய வழித்தட சல்லிக்கற்களை (track ballast), சேகரித்தல், வழங்குதல் மற்றும் பரப்புதல் (training out). சராசரி தொகை மதிப்பு (₹ லட்சத்தில்): **199.72;** முன்வைப்புத் தொகைக் கட்டணம்: ₹ **2,49,900;** பணி நிறைவேற்றும் காலம்: **06 மாதம்**
6	ஒப்பந்தப்புள்ளி எண்: **TPJ-13-2022-06**; விருத்தாச்சலம் சந்திப்பில், தரைத் தளத்தில், பணியாளர் குடியிருப்புகள் வகை - IV - நான்கு அலகுகள், மறுகட்டுமானம். சராசரி தொகை மதிப்பு (₹ லட்சத்தில்): **104.76;** முன்வைப்புத் தொகைக் கட்டணம்: ₹ **2,02,400;** பணி நிறைவேற்றும் காலம்: **06 மாதம்**
7	ஒப்பந்தப்புள்ளி எண்: **TPJ-13-2022-07**; பட்டுக்கோட்டை நிலையத்தில், SSE / S & T -க்காக, அலுவலகக் கட்டிடம் கட்டுமானம். சராசரி தொகை மதிப்பு (₹ லட்சத்தில்): **34.82;** முன்வைப்புத் தொகைக் கட்டணம்: ₹ **69,600;** பணி நிறைவேற்றும் காலம்: **03 மாதம்**
8	ஒப்பந்தப்புள்ளி எண்: **TPJ-13-2022-08**; TJ - KIK பிரிவில், தற்போதைய நிலத்தடி வழி எண்: 219-A & 256, LC எண்: 31, 24; நீடாமங்கலம் - மன்னார்குடி பிரிவில் LC எண்: 8; மற்றும் VM-TPJ (ML) பிரிவில், LC எண்: 300 மற்றும் 309 - ஆகியவற்றில், வடிகால் ஏற்பாடுகளை மேம்படுத்துதல். சராசரி தொகை மதிப்பு (₹ லட்சத்தில்): **248.10;** முன்வைப்புத் தொகைக் கட்டணம்: ₹ **2,74,100;** பணி நிறைவேற்றும் காலம்: **09 மாதம்**
9	ஒப்பந்தப்புள்ளி எண்: **TPJ-13-2022-09**; VM-TPJ (ML) பிரிவில், தற்போதைய நிலத்தடி வழி எண்: 895A, 896A மற்றும் 984 மற்றும் LC எண்: 302 - ஆகியவற்றில் வடிகால் ஏற்பாடுகளை மேம்படுத்துதல். சராசரி தொகை மதிப்பு (₹ லட்சத்தில்): **184.35;** முன்வைப்புத் தொகைக் கட்டணம்: ₹ **2,42,200;** பணி நிறைவேற்றும் காலம்: **09 மாதம்**
10	ஒப்பந்தப்புள்ளி எண்: **TPJ-13-2022-10**; SSE / நிரந்தர வழி / திருத்துறைப்பூண்டி பிரிவில், யார்டில், வழித்தடம் பராமரிப்புப் பணிகள். சராசரி தொகை மதிப்பு (₹ லட்சத்தில்): **11.20;** முன்வைப்புத் தொகைக் கட்டணம்: ₹ **22,400;** பணி நிறைவேற்றும் காலம்: **12 மாதம்**
11	ஒப்பந்தப்புள்ளி எண்: **TPJ-13-2022-11**; SSE / நிரந்தர வழி / பட்டுக்கோட்டைப் பிரிவில், யார்டில், வழித்தடம் பராமரிப்புப் பணிகள். சராசரி தொகை மதிப்பு (₹ லட்சத்தில்): **37.36;** முன்வைப்புத் தொகைக் கட்டணம்: ₹ **74,700;** பணி நிறைவேற்றும் காலம்: **12 மாதம்**
12	ஒப்பந்தப்புள்ளி எண்: **TPJ-13-2022-12**; SSE / நிரந்தர வழி / தஞ்சாவூர் பிரிவில், பல்வேறு நிலையங்களில், சுவிட்சுகள் மற்றும் கிராசிங்குகளை தற்காலிகமாகப் புதுப்பித்தல்; மற்றும் VM-TPJ (ML) பிரிவில், SSE / நிரந்தர வழி / கும்பகோணம் பிரிவில், பல்வேறு நிலையங்களில், மெயின் லைன் மீது, Through Turnout புதுப்பித்தல் - 60 கிலோ turnouts -களின் 6 sets. சராசரி தொகை மதிப்பு (₹ லட்சத்தில்): **28.32;** முன்வைப்புத் தொகைக் கட்டணம்: ₹ **56,700;** பணி நிறைவேற்றும் காலம்: **04 மாதம்**
13	ஒப்பந்தப்புள்ளி எண்: **TPJ-13-2022-13**; DEN / கிழக்கு எல்லை வரம்பில், CMS கிராசிங்குகள் மற்றும் சுவிட்ச் ரெயில்கள் மறுசீரமைப்பு. சராசரி தொகை மதிப்பு (₹ லட்சத்தில்): **61.50;** முன்வைப்புத் தொகைக் கட்டணம்: ₹ **1,23,000;** பணி நிறைவேற்றும் காலம்: **06 மாதம்**
14	ஒப்பந்தப்புள்ளி எண்: **TPJ-13-2022-14**; திருவாரூர் சந்திப்பில், தரைத் தளத்தில், வகை IV பணியாளர் குடியிருப்புகள் - நான்கு அலகுகள் மறுகட்டுமானம். சராசரி தொகை மதிப்பு (₹ லட்சத்தில்): **104.76;** முன்வைப்புத் தொகைக் கட்டணம்: ₹ **2,02,400;** பணி நிறைவேற்றும் காலம்: **09 மாதம்**
15	ஒப்பந்தப்புள்ளி எண்: **TPJ-13-2022-15**; பண்ருட்டி பேலஸ்ட் டிப்போ - VM-TPJ (ML) பிரிவில், முதுநிலைப் பிரிவுப் பொறியாளர் / நிரந்தர வழி / CUPJ மற்றும் KMU பிரிவுகளுக்காக, எந்திரம் நொறுக்கிய வழித்தட சல்லிக்கற்களை (track ballast), சேகரித்தல், வழங்குதல் மற்றும் பரப்புதல் (train out). சராசரி தொகை மதிப்பு (₹ லட்சத்தில்): **87.14;** முன்வைப்புத் தொகைக் கட்டணம்: ₹ **1,74,300;** பணி நிறைவேற்றும் காலம்: **04 மாதம்**
16	ஒப்பந்தப்புள்ளி எண்: **TPJ-13-2022-16**; திருச்சிராப்பள்ளி கோட்டத்தின், பல்வேறு SSE / நிரந்தர வழி பிரிவுகளில், கருவிகள் (accessories) உட்பட, தானியங்கி Thimble தொழில்நுட்பம் கொண்டு, வெல்டிங் பகுதிகளை (52 கிலோ & 60 கிலோ - 90 UTS) ஏற்படுத்துதல். சராசரி தொகை மதிப்பு (₹ லட்சத்தில்): **225.55;** முன்வைப்புத் தொகைக் கட்டணம்: ₹ **2,62,800;** பணி நிறைவேற்றும் காலம்: **06 மாதம்**
17	ஒப்பந்தப்புள்ளி எண்: **TPJ-13-2022-17**; Sr.DEN / வடக்கு / TPJ - பல்வேறு சாலை கீழ்ப்பாலம் / நிலத்தடி வழிகளில், தானியங்கி pumping ஏற்பாடுகளை வழங்குதல் - 30 எண்ணிக்கை. சராசரி தொகை மதிப்பு (₹ லட்சத்தில்): **40.76;** முன்வைப்புத் தொகைக் கட்டணம்: ₹ **81,500;** பணி நிறைவேற்றும் காலம்: **04 மாதம்**
18	ஒப்பந்தப்புள்ளி எண்: **TPJ-13-2022-18**; திருச்சிராப்பள்ளி சந்திப்பில், RPF/TC/KG மற்றும் 5'வது Battalion/RPSF/TC/KG -களில், கூரைக் கசிவை சரிசெய்தல். சராசரி தொகை மதிப்பு (₹ லட்சத்தில்): **26.94;** முன்வைப்புத் தொகைக் கட்டணம்: ₹ **53,900;** பணி நிறைவேற்றும் காலம்: **03 மாதம்**
19	ஒப்பந்தப்புள்ளி எண்: **TPJ-13-2022-19**; TPJ -யில், BG கோச் வளாகம் மற்றும் ETP -க்காக, அல்ட்ரா சோனிக் Flow மீட்டரை வழங்குதல், நிறுவுதல் மற்றும் செயல்படுத்துதல். சராசரி தொகை மதிப்பு (₹ லட்சத்தில்): **3.95;** முன்வைப்புத் தொகைக் கட்டணம்: ₹ **7900;** பணி நிறைவேற்றும் காலம்: **01 மாதம்**
20	ஒப்பந்தப்புள்ளி எண்: **TPJ-13-2022-20**; விழுப்புரம் சந்திப்பில், IRS வகை நடைமேடைக் கூரை 8 bays ஏற்படுத்துதல். சராசரி தொகை மதிப்பு (₹ லட்சத்தில்): **220.63;** முன்வைப்புத் தொகைக் கட்டணம்: ₹ **2,60,300;** பணி நிறைவேற்றும் காலம்: **06 மாதம்**
21	ஒப்பந்தப்புள்ளி எண்: **TPJ-13-2022-21**; விருத்தாச்சலம் சந்திப்பில், IRS வகை நடைமேடைக் கூரை 6 bays ஏற்படுத்துதல். சராசரி தொகை மதிப்பு (₹ லட்சத்தில்): **212.18;** முன்வைப்புத் தொகைக் கட்டணம்: ₹ **2,56,100;** பணி நிறைவேற்றும் காலம்: **06 மாதம்**
22	ஒப்பந்தப்புள்ளி எண்: **TPJ-13-2022-22**; ADEN வடக்கு / TPJ எல்லை வரம்பில், IRS வகை நடைமேடைக் கூரை 12 bays ஏற்படுத்துதல் - அரியலூர் மற்றும் லால்குடி நிலையங்களில் ஒவ்வொன்றுக்கும் 6 bays வீதம். சராசரி தொகை மதிப்பு (₹ லட்சத்தில்): **195.16;** முன்வைப்புத் தொகைக் கட்டணம்: ₹ **2,47,600;** பணி நிறைவேற்றும் காலம்: **06 மாதம்**
23	ஒப்பந்தப்புள்ளி எண்: **TPJ-13-2022-23**; VM - KPD பிரிவில், 1.10 கிமீ நீளத்திற்கு, கிமீ 157.100 முதல் கிமீ 158.200 வரை Through ரயில் புதுப்பித்தல் (P) மற்றும் SSE / நிரந்தர வழி / விழுப்புரம் மற்றும் வேலூர் பிரிவுகளில், degenerated glued ஜாயின்டுகளைப் புதுப்பித்தல் - 63 எண்ணிக்கை. சராசரி தொகை மதிப்பு (₹ லட்சத்தில்): **20.88;** முன்வைப்புத் தொகைக் கட்டணம்: ₹ **41,800;** பணி நிறைவேற்றும் காலம்: **06 மாதம்**
24	ஒப்பந்தப்புள்ளி எண்: **TPJ-13-2022-24**; திருச்சிராப்பள்ளி கோட்டத்தில், அரியலூர், திருவண்ணாமலை மற்றும் ஆரணி ரோடு - ஆகியவற்றின் TRD டிப்போக்களில் உள்ள டவர் வேகன் Sidings -களுக்கான குழிகளை (pits) கொண்ட டவர் வேகன் ஷெட்களை அமைத்தல். சராசரி தொகை மதிப்பு (₹ லட்சத்தில்): **199.45;** முன்வைப்புத் தொகைக் கட்டணம்: ₹ **2,49,700;** பணி நிறைவேற்றும் காலம்: **06 மாதம்**
25	ஒப்பந்தப்புள்ளி எண்: **TPJ-13-2022-25**; திருவண்ணாமலை நிலையத்தில், health யூனிட்டை மறுகட்டுமானம் செய்தல் மற்றும் SSE / நிரந்தர வழிக்கான அலுவலகக் கட்டிடம் கட்டுமானம். சராசரி தொகை மதிப்பு (₹ லட்சத்தில்): **105.08;** முன்வைப்புத் தொகைக் கட்டணம்: ₹ **2,02,500;** பணி நிறைவேற்றும் காலம்: **09 மாதம்**

வரிசை எண் 01: ஒப்பந்தப்புள்ளி
மூடும் நாள் மற்றும் நேரம்: **09.12.2022 அன்று 15.00 மணிக்கு;**
வரிசை எண்கள்: 02 முதல் 12 வரை: ஒப்பந்தப்புள்ளி
மூடும் நாள் மற்றும் நேரம்: **21.12.2022 அன்று 15.00 மணிக்கு;**
வரிசை எண்கள்: 13 முதல் 25 வரை: ஒப்பந்தப்புள்ளி
மூடும் நாள் மற்றும் நேரம்: **28.12.2022 அன்று 15.00 மணிக்கு;**

குறிப்பு: ஏதாவது திருத்தம் அல்லது மாற்றம் செய்யப்பட்டு, ஏதாவது திருத்த அறிவிப்பு அடுத்தடுத்து வெளியாகி பதிவேற்றம் செய்யப்படுகிறதா என்பதை சரிபார்த்து வருவது ஒப்பந்தப்புள்ளியர்களின் பொறுப்பு, இது (திருத்த அறிவிப்பு) ஒப்பந்தப்புள்ளியை சமர்ப்பிக்கும் போது கவனத்தில் கொள்ளப்பட வேண்டும்.

கோட்ட ரயில்வே மேலாளர்/ பணிகள்/ திருச்சிராப்பள்ளி

Follow us on : twitter.com/GMSRailway